<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 23/2014 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மகாலிங்கம் | நாள் | 12.02.2024 |
| தகப்பனார் பெயர் | கண்ணுபையன் | | |

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:-</u>**

1) இவ்வழக்கை முதலில் யார் தாக்கல் செய்தது என்றால், என் தந்தை கண்ணுபையன் என்பவர் தான் தாக்கல் செய்தார். தற்போது இவ்வழக்கை யார் நடத்துகிறார்கள் என்றால், நான் நடத்துகிறேன். யாருக்கு எதிராக நடத்துகிறேன் என்றால், 1 முதல் 3 மற்றும் 8 முதல் 10 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராகவும், 4 முதல் 7 வரையிலான பிரதிவாதிகளான மின்சார வாரியத்திற்கு எதிராகவும் இவ்வழக்கை நான் நடத்துகிறேன்.

2) இவ்வழக்கை நான் பொது அதிகார முகவர் என்ற அடிப்படையில் நடத்துகிறேனா என்றால், முதலில் பொது அதிகார முகவர் என்ற அடிப்படையில் தான் நடத்தினேன். பின்னிட்டு என் தந்தை இறந்துவிட்டதால், வாரிசு அடிப்படையில் நடத்தி வருகிறேன். இவ்வழக்கில் இ.ம.எண்.5/2021 என்ற மனுவில் 30.03.2021 ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில்தான் நான் இவ்வழக்கில் பொது அதிகார முகவராக செயல்பட்டு வருகிறேன் என்றால், சரிதான். என் தந்தையான 1 ம் வாதி கண்ணுபையன் எப்போது இறந்தார் என்றால், 22.05.2021 ம் தேதியில் இறந்தார்.

3) இவ்வழக்கில் என் தந்தைக்கு பதிலாக பொது அதிகார முகவராக செயல்பட இந்நீதிமன்றம் கடந்த 30.03.2021 ம் தேதியில் எனக்கு அனுமதி அளித்துள்ள நிலையிலும், பின்னிட்டு என் தந்தை கடந்த 22.05.2021 ம் தேதியில் இறந்துவிட்ட நிலையிலும், மேற்படி பொது அதிகாரம் முடிவுக்கு வந்துவிட்ட நிலையிலும், தற்போது இறந்த என் தந்தையின் வாரிசு என்ற அடிப்படையில் நான் இவ்வழக்கை தொடர்ந்து நடத்துவதாக சொல்லியுள்ள நிலையிலும், உ.வி.மு.ச.கட்டளை 22 விதி 3 ன் கீழ் மனு செய்து, முறையாக நீதிமன்றத்தின் அனுமதி பெற்று இவ்வழக்கில் நான் 2 ம் பிரதிவாதியாக சேர்ந்துள்ளேனா என்றால், செய்துள்ளேன்.

4) மேற்படி உ.வி.மு.ச.கட்டளை 22 விதி 3ன் கீழ் மனுவில் என் தாயரையும், என் சகோதரர்களையும் தான் தரப்பினர்களாக சேர்க்ககோரி பரிகாரம் கோரியுள்ளேன் என்றாலும், இறந்த என் தந்தையின் வாரிசாக என்னை காண்பித்து, இவ்வழக்கில் என்னை 2ம் வாதியாக சேர்க்ககோரி ஏதேனும் பரிகாரம் கோரியுள்ளேனா என்றால், அவ்வாறுதான் கோரியுள்ளேன்.

5) என் பிரமாண பத்திரிக்கையில் நான் குறிப்பிட்டுள்ள தங்கம்மாள் என்பவர் யார் என்றால், அவர் என் பாட்டி ஆவார். மேற்படி தங்கம்மாளின் கணவர் பெயர் என்னவென்றால், பழனியப்பன் ஆகும். பழனியப்பன்–தங்கம்மாள் தம்பதியினருக்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால், 3 மகன்களும், 5 மகள்களும் ஆக மொத்தம் 8பேர் உள்ளனர். இவ்வழக்கை என் தந்தை தாக்கல் செய்யும் போது மேற்படி 8 நபர்களின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளாரா என்றால், குறிப்பிட்டுள்ளார்.

6) என் தந்தை வழக்குரையில் தாவா சொத்தானது, வாய்மொழி பாகப்பிரிவினைப்படி தனக்கு பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார் என்றால், சரிதான். தாவா சொத்து போக என் தந்தைக்கு பாத்தியப்பட்ட மீதி நிலங்களை மற்ற வாரிசுகளுக்கு பிரித்து கொடுத்துவிட்டதாக என் தந்தை வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால், சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால், சர்வே எண்.534/3Cல் மொத்தமுள்ள 0.52சென்டில் நிலத்தில், என் தந்தைக்கு வாய்மொழியாக பாத்தியப்பட்ட 0.22சென்ட் தான் இந்த தாவா சொத்தாகும்.

7) மேற்படி சர்வே எண்.534/3Cல் மொத்தமுள்ள 0.52சென்டில் நிலத்தில், என் தந்தைக்கு ஒதுக்கப்பட்டதாக நான் சொல்லும், மேற்படி 0.22சென்ட் நிலத்தை தவிர என் தந்தைக்கு வேறு நிலங்கள் உள்ளதா என்றால், உள்ளது. என் தந்தை வழக்குரையில் மொத்தம் அவரது குடும்பத்திற்கு எந்தெந்த சர்வே எண்களில் எவ்வளவு சொத்துக்கள் பாத்தியப்பட்டிருந்தது என்றோ, குடும்ப பாகபிரிவினையில் யார் யாருக்கு எந்தெந்த சர்வே எண்களில் எவ்வளவு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றோ, மேற்படி பாகபிரிவினையில் தாவா சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்தை தவிர, என்

தந்தைக்கு வேறு எந்தெந்த சர்வே எண்களில், எவ்வளவு விஸ்தீரணத்தில் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றோ குறிப்பாக சொல்லவில்லை என்றால், சரிதான்.

8) என் தந்தை உயிருடன் இருந்த சமயத்திலும், அவர் இறந்துவிட்ட பின்னரும், மொத்தம் மூன்று முறை வாதிகள் தரப்பில் தாவா திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். அவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட சமயத்தில், என் பாட்டி தங்கம்மாள் பெயரில் எவ்வளவு சொத்து இருந்தது என்பது குறித்தோ, பாகப்பிரிவினையில் என் தந்தைக்கு எந்தெந்த சர்வே எண்களில் பாகம் ஒதுக்கப்பட்டது என்பது குறித்தோ, வழக்குரையை திருத்த நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால், சரிதான்.

9) இவ்வழக்கில் என் தந்தையை தவிர, என் பாட்டி தங்கம்மாளின் இதர வாரிசுதாரர்கள் யாரையும் நான் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால், சரிதான். தற்போது என் தாயார் 8ம் பிரதிவாதி என்னுடன்தான் வசித்து வருகிறார் என்றால், சரிதான். 9, 10 பிரதிவாதிகளாக என் சகோதரர்களுக்கும், எனக்குமிடையே சரியாக பேச்சுவார்த்தை இல்லை. என் தாயாரான 8ம் பிரதிவாதி என்னுடன் வசித்துவரும் நிலையில், எதனால் அவரை வாதியாக சேர்க்காமல், பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால், என் தாயாருக்கு உடல்நிலை சரியில்லாததால், அவரை வாதியாக சேர்த்தால், வழக்கில் காலதாமதம் ஏற்படும் என்பதால் அவரை பிரதிவாதியாக சேர்த்துள்ளேன்.

10) இவ்வழக்கில் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு அதை என் தாயார் பெற்றுக்கொண்டுள்ளார் என்றால், சரிதான். என் தாயார் இவ்வழக்கில் ஆஜராகாமல் தோன்றா தரப்பினர் ஆக்கப்பட்டுள்ளார் என்றால், சரிதான். இவ்வழக்கில் 9, 10 பிரதிவாதிகளான என் சகோதரர்களும் தோன்றா தரப்பினர்களாக உள்ளனர் என்றால், சரிதான். எதனால் 9, 10 பிரதிவாதிகளான என் சகோதரர்களை இவ்வழக்கில் வாதிகளாக சேர்க்காமல், பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால், அவர்களுடன் சரியாக பேச்சுவார்த்தை இல்லாததால் அவர்களை இவ்வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன்.

11) நான் சொல்வது பொய்யானது என்றாலும், தற்போதும் 9, 10 பிரதிவாதிகளான என் சகோதரர்களுக்கும், எனக்கும் நல்ல சுமூகமான உறவு உள்ளது என்றாலும், தாவா சொத்தில் என் தந்தைக்கு எவ்வித உரிமையும் இல்லை என மேற்படி 9, 10 பிரதிவாதிகள் தெரிவித்து, இவ்வழக்கை என்னுடன் இணைந்து, நடத்த மறுத்ததால் தான் நான் அவர்களை இவ்வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

(1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.